# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 பிப்ரவரி 2002 பகுதி : 2

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


மதிப்புறு ஆசிரியர் :

**இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம். .....39
பேரறிஞர் நா. பாலுசாமி

2. ஓர் இயற்றமிழ் மாணவனின்
கல்வெட்டுப்பார்வைI .....44
பேரறிஞர் அ.மா. பரிமணம்

3. நெஞ்சோடு தலைமகன் .....50
பேரறிஞர் க. கனகராசு

4. சீவகசிந்தாமணி காட்டும் அரசியல் .....58
பேரறிஞர் ப. பழநியம்மாள்

5. தொல்காப்பியம் வண்ண நோக்கில் தேவாரம்
அமைந்த விதம். .....69
வித்துவான் தா. குருசாமி தேசிகர்

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

## (எழுத்து-பிறப்பியல்)

பேரறிஞர் நா.பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

### (மெய்யெழுத்துக்களின் பிறப்பு)

சூத்.89

(க்.ங்)

ககார ஙகாரம் முதல் நா அண்ணம்

க் ங் - இவ்விரண்டு மெய்யெழுத்துக்களும் அடிநாக்கு அடி அண்ணத்தைத் தடவப் பிறப்பனவாம். ககரம் - க் ; ஙகரம் - ங் ; அண்ணம் - வாயின் அடிப்பகுதி. சூத்திரத்தில் க ங என உயிர் மெய்யாக வரினும், க் ங் என மெய்யெழுத்தாகக் கொள்க. 'முதல்' என்பதனை அண்ணம் என்பதனோடும் கூட்டுக.

சூத்.90

(ச், ஞ்)

சகார ஞகாரம் இடை நா அண்ணம்

ச், ஞ் - இவ்விரு மெய்யெழுத்துக்களும் இடைநாக்கும் இடை அண்ணமும் பொருந்தப் பிறக்கும். 'இடை' என்பதனை 'அண்ணம்' என்பதனோடும் கூட்டுக

சூத்.91

(ட், ண்)

டகார ணகாரம் நுனிநா அண்ணம்

ட், ண் - இவ்விரண்டு மெய்யெழுத்துக்களும், நுனி நாக்கும் நுனி அண்ணமும் பொருந்தப் பிறக்கும். 'நுனி' என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக.

சூத். 92

அவ்வாறு எழுத்தும் மூவகைப் பிறப்பின

மேலே கூறப்பட்ட க்,ங்,ச்,ஞ்,ட்,ண் என்ற ஆறு மெய்யெழுத்துக்களும் முற்கூறிய மூன்று வகைகளில் பிறக்கும். ஆறும் ஆறு வகையாகப் பிறவா என்பது கருத்து.

சூத். 93

(த், ந்)

அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்
தாமினிது பிறக்கும் தகார நகாரம்

(ப-ரை) அண்ணம் நண்ணிய - அண்ணத்தைப் பொருந்திய, பல்முதல் மருங்கில் - பல்லின் அடிப்பாகத்தில் நா நுனி பரந்து - நாவின் நுனிப்பாகம் விரிந்து, மெய் உற ஒற்ற - தனது வடிவு மிகவும் சேர, தகாரம் நகாரம் - த், ந் ஆகிய இரண்டும், தாம் இனிது பிறக்கும் - நன்கு வெளிப்படும்.

அண்ணத்தைச் சேர்ந்த பல்லின் அடிப்பகுதியை நாவினது நுனி சென்று பொருந்த த், ந் ஆகிய இரு மெய்களும் பிறக்கும் என்பதாம்.

சூத். 94

(ற், ன்)

அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்

(ப-ரை) நுனிநா - நாவின் நுனி, அணரி - மேல்நோக்கிச் சென்று, அண்ணம் ஒற்ற - அண்ணத்தைப் பொருந்த, றஃகான் னஃகான் ஆ இரண்டும் - ற, ன் ஆகிய இரண்டும், பிறக்கும் - வெளிப்பட்டு ஒலிக்கும்.

அணரி - மேல்நோக்கிச் சென்று. ற், ன் — இவ்விரண்டும் நாக்கின் நுனியானது அண்ணத்தைத் தடவப் பிறப்பனவாகும்.

சூத். 95

(ர், ழ்)

நுனிநா அணரி அண்ணம் வருட
ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்

(பொழிப்பு) நுனிநா மேற்சென்று அண்ணத்தைத் தடவ ர், ழ் - ஆகிய இரண்டும் பிறக்கும். வருட - தடவ.

சூத். 96

(ல், ள்)

நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்

(ப-ரை) நா விளிம்பு வீங்கி - நாவின் விளிம்பு தடித்து, பல் அண் முதல் உற - பல்லின் அணிய இடத்தைப் பொருந்த, அ வயின் அண்ணம் - அவ்விடத்து அவ் அண்ணத்தை, லகாரம் ளகாரம் அ இரண்டும் - லகார ளகாரமாகிய இரண்டும், ஒற்றவும் வருடவும் - முறையே ஒற்றவும், தடவவும், பிறக்கும் - பிறக்கும் என்பதாம். ல் - ஒற்றவும், ள் - தடவவும் பிறக்கும் எனத் தெளிக.

சூத். 97

(ப், ம்)

இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்

(பொழிப்பு) ப், ம் - இவ்விரண்டு மெய்யெழுத்துக்களும் கீழ்உதடும் மேல் உதடும் சேரப் பிறக்கும்.

சூத். 98

(வ்)

பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்

மேல் பல்லும் கீழ் உதடும் பொருந்தினால், 'வ்' என்னும் மெய் பிறக்கும்.

சூத். 99

(ய்)

அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்

(ப-ரை) அண்ணம் - அண்ணத்தை, சேர்ந்த - நாவானது சேர்ந்த, மிடற்று எழு - கழுத்தினின்று எழுகின்ற, வளி இசை - காற்றாலாகிய ஓசை, கண்ணுற்று அடைய - அவ்வண்ணத்தை அணைந்து செறிய, யகாரம் பிறக்கும் - 'ய்' என்ற மெய் பிறக்கும்.

மிடறு - கழுத்து, கண்டம். வளி - காற்று. இசை - ஓசை, ஒலி. கண்ணுற்று - அணைந்து

சூத். 100

(சிறப்பு விதி)

மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்

(பொழிப்பு) மெய்யெழுத்துக்கள் ஆறும் தத்தம் பிறப்பிடங்கள் மேற்சொல்லப்பட்ட விதமே ஆயினும், அவை மூக்கின் வழியாகத்தான் தோன்றி ஒலிக்கும் என்பது அறிக. (பள்ளி-இடம்)

சூத். 101

(சார்பு எழுத்துக்களின் பிறப்பு)

சார்ந்துவரின் அல்லது தமக்கியல்பு இலவெனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பின் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியின் தம்மியல்பு இயலும்

(பொழிப்பு) சில எழுத்துக்களைச் சார்ந்தே வருவதன்றித் தாமே ஒலிக்கும் இயல்பின அல்ல என்று கருதப்படும் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்று சார்பெழுத்துக்களும், தாம் சார்ந்த எழுத்துக்களைப் பொருந்தியே பிறக்கும் என்பதாம்.

ஏனை மூன்றும் - குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற மூவகைச் சார்பெழுத்துக்கள். சிவணி - பொருந்தி. காட்சி - நெஞ்சு. அளபெடை, உயிர்மெய் ஆகியவையும் தம்மை

ஆக்கிய எழுத்துக்களின் பிறப்பிடத்தையே கொண்டு பிறக்கும்.

சூத். 102

(புறனடைச் சூத்திரம்)

எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே;
அஃதிவண் நுவலாது எழுந்துபுறத்து இசைக்கும்
மெய்தெரி வளியிசை அளவுநுவன்று இசினே

உரம், கண்டம், உச்சி ஆகிய மூவகை இடங்களினிடமாக நின்று, காற்றின் எழுச்சியால் தோன்றும் எழுத்துக்களை, மூக்கு, இதழ், நா, பல், அண்ணம் ஆகிய ஐவகை உறுப்புக்களின் வாயிலாகச் செவிப்புலனாக வெளிப்படும்போது, உந்தியினிடமாக உள்ளெழும் காற்று முரண்பட்டு வருதலைக் குற்றமற ஆய்ந்து, மாத்திரையால் அளவிட்டு மேற்கொள்ளல் நிறைமொழி மாந்தராகிய அந்தணர்தம் மந்திர நூலின்கண்ணதாகும். அவ்வாறு கூறாமல், உள்ளிருந்து மேலெழுந்து வெளிப்படும் காற்று (ஓசை) பொருள் தரும்போதுமட்டில் எழுத்தெனப்படும் என்னும் கோட்பாடே இங்குக் கூறப்படுகிறது.

பள்ளி-இடம், நிலம். உறழ்ச்சி - முரண்படல். அகத்து எழுவளி - மூலாதாரம். வாரம் - எழுத்துப் பிறப்பிடங்களாகிய தலை, மிடறு, நெஞ்சு. இசை-ஓசை. அளவிற்கோடல் - மாத்திரை கொள்ளல். அந்தணர் மறை - சான்றோர்தம் மந்திரமொழிகள் அடங்கிய நூல். மெய்தெரிதல் - பொருள்தருதல்.

அஃதாவது, இப்புறநடைச்சூத்திரம் எழுத்துக்களின் பிறப்புப் பற்றியது. ஒலியே எழுத்தாம். ஆயின், பொருண்மை உடைய ஒலியே இலக்கண நூலார் கூறும் எழுத்து. மந்திர நூல் கருத்து இதனின் வேறுபட்டது என்பது அறிக.

- தொடரும்

# ஓர் இயற்றமிழ் மாணவனின் கல்வெட்டுப் பார்வை - 1

பேரறிஞர் அ.மா. பரிமணம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

மாமன்னன் இராசராசன் காலத்திற்குப் பின்னர்க் கல்வெட்டுக்களில் விரிவாக இடம் பெறும் மெய்க்கீர்த்திப் பகுதியிலும், ஒருசில கல்வெட்டுக்களின் இடையே இடம்பெறும் செய்யுட் பகுதிகளிலும் இவை போன்ற பிழைகள் குறைவாக இருப்பதனைக் காணமுடிகின்றது. மேலும் அவை செய்யுட்களாதலின் அவற்றை ஏட்டில் வரைவோர் அல்லது கல்லில் குயிலுவோர் அல்லது செம்பில் செதுக்குவோர் எவராயினும் அவற்றை இயற்றியவர் புலவராயிருத்தல் வேண்டும். உரைநடைப் பகுதியிலமையும் செய்தியாயின், அதனை உரைப்பவர் அல்லது எழுதுபவர் புலவராக இருத்தல் வேண்டும் என்னும் கட்டாயமின்று. உரைநடைப் பகுதியிற் காணும் பிழைகட்கு இஃதுமோர் காரணமாகலாம். செய்யுட் பகுதியாக அமைந்த இரு எடுத்துக்காட்டுக்கள் இதனைத் தெளிவுபடுத்தல் கூடும். அவை பின்வருமாறு:

"வன்கரை பொருது வருபுனற் பெண்ணை
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ் நான்மைத்
தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
மூரிவண் டடக்கை பாரித னடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரி கடிஞ்செல்
மினல்புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
கனல்புகும் கபிலக் கல்லது புனல்வளர்"

(தி.வை.சதாசிவ பண்டாரத்தார் - பிற்காலச் சோழர் சரித்திரம் - பக்.606, 607 இதன் கல்வெட்டு மூலத்தில் இரண்டொரு பிழைகள் இருந்து திருத்தி வெளியிட்டிருக்கலாம். முதல் இராசராசனது இந்த மெய்க்கீர்த்திப் பகுதி, செய்யுள் நலம் அனைத்தும் கொண்டிலங்கக் காணலாம்)

"அலை புரியும் புனற்பொன்னி ஆறுடைய செ(ே)சாழன்
அருமொழிக்கு யாண்டு இருபத்தென்றாவ தென்றுங்
கலைபுரியு மதிநிபுணன் வெண்கிழான் கணிச் (செ)சக்கரமரு
பொற்சூரியன்தன் நாமத்தால் வாம
நிலைநிற்குங் கலிஞ்சிட்டு நீமிர் வைய்கை மலைக்கு
நீடுழி இருமருங்கும் நெல்விளையக் கண் டெ(ே)டான்
குலைபுரியும் படைஅரைசர் கொண்டாடும் பாதன்
குணவிர மா முனிவைக் --"

கல்வெட்டிற் கண்டபடியே பதித்துள்ளமையால் சில எழுத்துப் பிழை இருப்பினும் கவிதைச் சிறப்புக்கள் விளங்கக் காணலாம். (S.I.I. Vol. I Page.95 Inscription at Tirumala near Polur) தமிழ்க் கல்வெட்டுக்களிற் போலக் கிரந்தத்திலோ, நாகரியிலோ அமையும் தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் பிழைகள் கொண்டுள்ளனவா என்பதனை அறியக்கூடவில்லை.

'வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்' என்று தொல்காப்பியர் கூறியதில் வழக்கு நிலைமை காலந்தோறும் எவ்வாறிருந்து வந்துளது என்பதனை அவ்வக் காலங்களில் தோன்றிய கல்வெட்டுக்கள் உணர்த்தி நிற்கின்றன. அதே சமயம் செய்யுள் நிலைமை எவ்வாறிருந்து வந்துள்ளது என்பதனைப் பார்க்கலாம். அதிலும், மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. நூலியலில் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் என்றும், யாப்பியலில் துறை தாழிசை விருத்தங்கள் என்றும், பொருண்மையியலில் பக்தி, சமயச் செய்திகள் என்றும் பிறவாறும் வளர்ச்சி நோக்கிய மாறுபாடுகள் தோன்றியுள்ளன என்றாலும், இயற்றமிழ் இலக்கணத்தில் பெரிய மாற்றங்கள் தோன்றவில்லை என்றே கூறவேண்டும். வேற்று மொழிச் சொற்களின் வரவு மிக்கிருந்த போதிலும், தமிழிற் பிற ஒலி கொண்ட வேற்றுமொழிச் சொற்கள் வரவு பற்றிய விதி மாறாமல் பின்பற்றப்பட்டுள்ளது. கம்பர் 'ராமா' என்றோ 'ஜானகி' என்றோ தம் நூலுள் யாண்டும் கூறவில்லை. "இராமன் என்னும் செம்மை சேர் நாமந்தன்னைக் கண்களில் தெரியக்கண்டான்", "சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்" என்பன கம்பன் வாக்குகள். சேக்கிழார், தமிழ் ஒலி மரபு பிறழாமல் சடங்கவி, சோமாசி என்று கூறியது முன்னரே காட்டப்பட்டது.

வடமொழிப் பெயர்களையும், சொற்களையும் ஆளநேர்ந்த ஆழ்வார்களும், நாயன்மார்களும் தமிழ் ஒலிப்படுத்தியே தம் பக்திப் பாசுரங்களில் அவற்றைப் பயன்படுத்தினர்.

வெளிநாட்டுச் சமயத்தவர்களும் தம் பனுவல்களில், பிறமொழிப் பெயர்களைத் தமிழ் மரபுப்படியே ஆள்வாராயினர். சலாம், சபாசு என வேற்றுமொழிச்சொற்களைத் தமிழ் ஒலிப்படுத்தி வழங்கியவர்கள் இருக்க, வடமொழி ஒலியோடே அச்சொற்களைத் தம் தமிழ்ப்பாக்களிடையே இணைத்துப் பாடிய அருணகிரியாரைப் போலும் சிலரையும் காணமுடிகின்றது. சந்த இனிமை நோக்கி இந்த மரபு மாற்றத்தினை மேற்கொண்டனர்.

தொல்காப்பிய ஆணையை மீறி, 'உருத்துவரும் மலிர் நிறை' (பதிற்று 28) எனப் பிறமொழிச் சொற்கலப்பு மிக்க நிலையில் நன்னூலார் போன்றார் அதற்கேற்ப விதிகளை அமைக்கலாயினர். நன்னூலில் வடமொழி ஆக்கம் பற்றிய ஒரு பகுதி இடம் பெற்றிருப்பதும், பதவியல் என்று ஓரியலுக்குப் பெயரிட்டிருப்பதும் கொண்டு இதனை அறியலாம். திகழ்+ தசக்கரம் என்பது திகடசக்கரம் என்று புலவரால் ஆளப்பட்டமை கண்டு அதற்கேற்பப் பின்வந்த இலக்கண நூலோர் விதி அமைத்ததையும் காண முடிகிறது.

பொதுமக்கள் உலகில் (வழக்கு) புணர்ச்சி இலக்கணம் முதலியவற்றில் நெகிழ்ச்சியும், கவலையின்மையும் காணப்பட, புலமக்கள் உலகில் (செய்யுள்) அவ்விதிகள் இறுக்கமாகவும் கவனமாகவும் பின்பற்றப்பட்டு வந்துள்ளவற்றை நோக்குங்கால், முன்னர்க் குறிப்பிட்ட வேற்றவர் அரசியல், சமயம், முதலியவற்றோடு வேறுகாரணமும் இருக்கலாமா என்று எண்ணத்தோன்றுகிறது.

இன்று அறிவியலின் சாதனைகளுள் ஒன்றான செய்தித் தொடர்புச் சாதனங்கள், உலகினை மிகவும் சுருங்குமாறு செய்து விட்டன எனலாம். அதனால் உலக மக்களினங்கள் மிக நெருக்கமாக வந்து, பழகும் வாய்ப்பும் இன்றியமையாமையும் எழுந்துள்ளன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திற்கும் சென்ற

நூற்றாண்டின் (கி.பி.20ம் நூ) தொடக்கத்திற்கும் இடைப்பட்ட காலத்துச் செய்தித் தொடர்பு நிலைமைகளை ஆராய்ந்தால் இந்த உண்மை நன்கு புலப்படும். அதனை, ஆயிரம் ஆண்டிற்கும் இரண்டாயிரம் ஆயிரம் ஆண்டிற்கும் முற்பட்ட காலங்களில் வைத்து நோக்கினால் வேறுபாடு எவ்வளவு என்பதனை உணரலாம். அன்று மக்கள் தொடர்பு என்பது சில குடும்பங்கள் கொண்ட சிற்றூர் அளவிலும், பல குடும்பங்கள் கொண்ட பேரூர் அளவிலும், கோட்டம், கூற்றம், நாடு, வளநாடு என விரியும் நாட்டுப் பகுதிகள் அளவிலுமாக அமைந்தது. நாடு வளநாடு என்னும் விரிவான அளவில் ஆட்சித் தொடர்பாளர்கள், சமய நிறுவனத்தார், வணிகப்பெருமக்கள் போன்றோரும், சிற்றூர், பேரூர் போன்ற அளவில் பொதுமக்களும் தொடர்பு கொள்பவராயினர். தமிழ்ப் புலவராயினார் தமிழ் வழங்கும் பகுதி அனைத்திற்கும் உரியவராயினர். அரசு, வணிகம், சமயம் போன்ற துறைகளில் ஈடுபட்டோர் அவ்வத்துறைக்குரிய கல்வியும் ஞானமும் பெற்றவர்களாக இருந்தால் போதுமானது. அவர்கள் அனைவரும் இலக்கண இலக்கியப் பயிற்சி மிக்க தமிழ்க்கல்வி உடையவராதல் வேண்டுமென்பது கட்டாயமாகின்றது. அவர்களுள்ளும் சேக்கிழார் போலும் துறைசார் புலமையும் தமிழ்ப் புலமையும் ஒருங்கே பெற்றவர்களும் இருந்துள்ளனர்.

தமிழர்க்குத் தமிழ்மொழி தாய்-தந்தை வழியாக, உற்றார் உறவினர் வழியாக, ஊரவர் வழியாக நிரம்பும் செல்வமாகும். அதனோடு நாள் வாழ்விற்குத் தேவையான மொழிக்கல்வி பெற்றால் வாழ்க்கையைச் செம்மையாக நடத்த இயலும். தமிழில் புலமை பெற விரும்புவோர் தக்காரிடம் சென்று தங்கிப் புலமை பெற வேண்டும். இக்காலத்துப்போல மாணவர்களைத் தேடிச்சென்று கற்பிக்கும் நிலை இல்லை. இதனை நாமறிந்த டாக்டர் உ.வே.சா. அவர்கள் கற்ற முறைக்கும், கல்லூரிகளில் அவர் கற்பித்த முறைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினால் அறியலாம்.

ஒரு மன்னரின் கொடை கல்லில் பொறிக்கப்பெற்று ஆவணப்படுத்தப்படுகின்றதென்றால், அம்மன்னரின்

வாய்மொழி, அதனைக் குறித்துக் கொள்ளும் திருவாய்க்கேள்வி, அமைச்சர்கள், ஆவணம் வரையும் திருமந்திர ஓலை நாயகம், அவருக்குக் கீழ்ப் பணிபுரியும் கீழ்நிலை அதிகாரிகள், கல்லில் பொறிப்போர், ஒப்பக்கையெழுத்திடுவோர் என்றினைய பலரும் அந்த ஆவணத் தொடர்பு கொண்டவராவர். அவர்கள் அனைவரும் தமிழ்ப்புலவர்களாக இருத்தல் வேண்டுமென் பதில்லை. தொடக்கத்தில் மெய்க்கீர்த்தி, இடையிடையே செய்திகள் தாங்கிய செய்யுட்கள் இடம் பெறும் காலத்தில் மட்டும்தான் தமிழ்ப்புலவர் அந்த ஆவணத்தோடு தொடர்பு கொள்வர். இவற்றை மனத்திற்கொண்டு சிந்தித்தால், ஆவணத்தின் உரைநடைப்பகுதியில் ஏற்படும் எழுத்து, சொற்பிழைகட்குக் காரணம் புலனாகும். சற்றே விரிந்திருந்தாலும் கொழுக்கட்டை வெந்தால் போதும் என்னும் பாங்கில், கல்வெட்டு வாசகத்திலிடம் பெற்ற எழுத்து, சொற்பிழைகளைப் பொருட்படுத்தாது வாசகப் பொருண்மையைப் போற்றிக் கொள்ளும் நிலைமையே நீடித்து வந்துளது. இதற்கு யார் எவ்வகையில் காரணராக அமைந்தாலும் பிழை பிழையேயாகும். கல்லில் பொறித்தவரை மட்டும் காரணமாகக் கூறுவது பொருந்தாது. இக்காலத்தில் திருக்கோயில்களில் திருப்பதிகம் போன்றவற்றைப் பொறிப்பதற்கும், அக்காலங்களில் பொறிக்கப்பட்டமைக்கும் வேறுபாடுளது. அன்று சுவர்கள் அல்லது பாறைகள் உள்ள இடம் சென்று பொறித்தல் வேண்டும். இன்று பொறிப்பவர் இருக்கும் தொழிற்கூடங்களில், சிறந்த சாதனங்களைப் பயன்படுத்திப் பொறித்து உரிய இடங்களில் பொருத்திவிடலாம். இன்றைய கற்பொறிப்பிலும் பிழைகள் இடம்பெறும் போது, பழங்காலக்கல்வெட்டுக்களில் பிழைகள் இடம் பெற்றதில் வியப்பதற்கில்லை.

அன்றும் சரி, இன்றும் சரி மொழியினைப் பயன்படுத்துங்கால், உரிய மரபு பின்பற்றப்பெறல் வேண்டும். அதனால்தான் தொல்காப்பியர் நூன்மரபு, மொழிமரபு என்று இயல்கள் வகுத்தவர் இறுதியில் மரபியல் என்றே ஓரியல் வகுத்துள்ளார். சொல் ஒருமையாயின் தேவற்கு என்றும், பன்மையாயின் தேவர்க்கு என்றும் இருக்க வேண்டிய மரபு

'தேவர்கு' என்றிருப்பது பிழையாகும். 'ஒன்றினாற் றடவிக்' கட்டிய என்றோ 'ஒன்றினால் தடவிக்கட்டிய' என்றோ இருக்க வேண்டியது, 'ஒன்றினால்த் தடவிக் கட்டிய' என்றிருப்பதும் பிழையே.

பழங்காலக் கல்வெட்டுக்களில் செப்பேடுகளில் இங்ஙனம் நிகழ்ந்து விட்ட பிழைகளை இனி ஒன்றும் செய்ய இயலாது. அதனால் அவற்றைப் பொருட்படுத்தாது, அப்பிழைகட்கு அப்பால் அப்பொறிப்புக்களில்-ஆவணங்களில்- இடம் பெற்றுள்ள வரலாற்றுண்மைகள், கலைகள் பற்றிய செய்திகள், சமய - சமுதாயப் பண்பாடு பற்றிய குறிப்புக்கள் ஆகியவற்றைத் தேடிக் கண்டு காட்டுவதும், காத்துப் பேணுவதும் அத்துறை ஆய்வாளர் தம் கடமையாகும். அம்முயற்சியில் ஈடுபட்ட, ஈடுபடும் சான்றோர், "ஆராயினும்.... நீதியுடன், பாரார் அறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே" என்றவாறு (T.AS. Vol. I. PP 95-101 சாசனத் தமிழ்க்கவி சரிதம் மேற்கோள் பக்.133) அவர்களைப் பணிவொடு பாராட்டுவது 'வளர்வதன் பாத்தியுள் நீர் சொரி'யும் பாங்கினதாகும்.

*செந்தமிழ் இதழுக்குத் திங்கள்தோறும் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிய பெரும்புலவர்,'பேராசிரியர்',பேரறிஞர் அ.மா.பரிமணம் அவர்கள் 1.2.2002 அன்று தஞ்சையில் காலமான செய்தி கேட்டு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் வெளிவரும் செந்தமிழ் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அந்த நல்லுயிர் அமைதி பெறுமாக.*

**வெண்பா**

*நூலறிவு நாவிளம்பும் நுண்ணறிவு கோல்விளம்பும்*
*மேலறிவு கேட்பின் மிகமிளிரும் - சாலவே*
*பாரில் பரிமணம்போல் பண்பாளர் யாரேகாண்*
*நேரில் இவர்க்கிவரே நேர்*

- பேரறிஞர்.நா.பாலுசாமி

# நெஞ்சோடு தலைமகன்

பேராறிஞர் க. கனகராசு

அகமாவது இளமைநலம் வாய்க்கப் பெற்ற ஆணும் பெண்ணும் நுகரும் காதல் ஒழுக்கமாகும். சங்ககால அகஇலக்கியங்கள் அகமாந்தர்களின் மனவுணர்வுகளைச் சித்திரிப்பவை. அவற்றுள் குறுந்தொகை அம்மனவுணர்வுகளை மிகத் தெளிவாகவும் நேரடியாகவும் சொல்கின்றது.

அகப்பொருள் ஒழுகலாற்றில் பெண்ணே முதலிடம் பெறுகிறாள். ஒவ்வொரு பாடலும் அவளை அடிப்படையாகக் கொண்டே பாடப்பெற்றுள்ளன. இவள் மன வெளிப்பாடு ஆணின் செயற்பாடு காரணமாய் அமைகின்றது.

அக இலக்கியங்கள் காட்டும் ஆண், பெண்ணுக்கு நின்ற சொல்லனாய், நீடு தோன்றினியனாய்த் தோன்றுகின்றான். அவன் அவள்பால் கொண்ட அன்பு நிலத்தினும் பெரிதாய், வானிலும் உயரமாய், கடலினும் ஆழமானதாய்த் தோன்றுகிறது. தாமரையின் தாதினை ஊதிச் சந்தனமரத்தில் தொடுக்கப்பட்ட தேனைப் போல இனிக்கின்றது. ஆனாலும் பெண் ஆணோடு சேர்ந்து மகிழும் நிலையைச் சொல்வதிலும் அவள் அவனைப் பிரிந்து அவனோடு மகிழ்ந்த இயல்பைச் சொல்லும் பாடல்களே மிகுதி. அப்பொழுதெல்லாம் அவன், 'கொடியன்','பொய்வலான்' என்றெல்லாம் இகழப்படுகின்றான். எனவே ஆண் கூற்றுப் பாடல்களின் கருத்து வெளிப்பாடு பற்றிய ஆய்வு தேவையாகின்றது.

குறுந்தொகையில் தலைமகன் கூற்றாக 58 பாடல்கள், 35 புலவர் பெருமக்களால் பாடப் பெற்றுள்ளன. அவன் தோழியிடம் பேசுவன (6) அவனோடு தலைமகளை இணைத்து வைக்க வேண்டுபவை, பாங்கனிடம் பேசுபவை (15), தலைமகளின் அழகும், அது வருத்திய தன்மையும், அதனால் 'காமம்' ஆற்றொண்ணா வகையில் மிகுந்தமையையும்

புலப்படுத்துவன, பாகனிடம் பேசும் பேச்சுக்களில் (7). பிரிவால் வருந்தும் தலைமகளின் துயர் நீக்கப்பட வேண்டும் என்ற அவனின் மனவேகம் காணப்படுகின்றது. ஆனால் அவன் நெஞ்சோடு பேசும் பேச்சுக்கள் அவனின் ஆழ்மனவுணர்வுகளைப் புலப்படுத்துபவை.

தலைமகன் நெஞ்சோடு பேசும் கூற்றுக்குத் தோழி இவளென அறியப்படல், தோழியால் குறை மறுக்கப்படல், தலைவிக்குக் கற்பித்த பருவ வரவு, இயற்கைப் புணர்ச்சி இன்பம், இடந்தலைப்பாட்டில் பின்னும் கூடவிரும்புதல், இரவுக்குறி மறுக்கப்படல், உணர்ப்பு வயின் வாரா ஊடல். பொருள் கடைக்கூட்டம், இடைச் சுரத்துப் பொல்லாங்கு ஆகியன பின்புலன்களாக அமைகின்றன.

பொதுவாகப் பல்வகைப்பட்ட பண்புநலன்கள் நுட்பமாகச் சொல்லப் பெற்றபோதும் இவைகளைப் புணர்ச்சியை முன்னிறுத்தி நெஞ்சுக்குச் சொல்வன, பிரிவை முன்னிறுத்தி நெஞ்சுக்கு மொழிவன என்றிரு தன்மைகளாய் வகைப்படுத்தலாம். உலகியல் வழக்கும், நாடக வழக்கும் இணைத்துப் பாடப் பெற்றவை அகப்பாடல்கள். நாடகப் பாங்கு என்பது கூற்ற முறையாகும். இப்பாடல்கள் அனைத்தும் ஒருவரை முன்னிலைப்படுத்தி இன்னொருவர் பேசும் ஒற்றைக் கூற்றுக்காட்சி நாடகங்கள் ஆகும்.

நாடக மாந்தர் தம் உள்ள உணர்ச்சிகளை வெளிப்படுத்த நாடகாசிரியன் கையாளும் உத்தி முறைகளுள் ஒன்று தனிமொழி. பிறமாந்தர்களோடு பேசும் பேச்சுகளை விட, தனிமொழியில்தான் ஒருவன் தன் ஆழ்மன உணர்வுகளைத் தெளிவாக வெளிப்படுத்த இயலும், அத்தகைய உத்தி முறையாக இந்நெஞ்சோடு கிளத்தல் பாடல்களைக் கருதலாம்.

புணர்ச்சியை முன்னிறுத்தி நெஞ்சுக்குச் சொல்வன

இவை புணர்ந்து நீங்கும் தலைமகன் கூற்றாயும், புணரவரும் தலைமகன் கூற்றாகவும் வெளிப்படுகின்றன.

முன்னது இன்பந்தந்த தலைமகளின் அழகைப் பாராட்டுவதாய் அமைகிறது. பின்னது முன்னவர் இன்பந்தந்த தலைமகளைப் பின்னும் பெறவேண்டும் என்ற விருப்பத்தை வெளியிடுவதாய் அமைகிறது.

தலைமகன் புணர்ச்சியில் தலைமகள் கூந்தலே பாயலாகக் கிடந்தான். அது அவனுக்குக் காட்சியின்பத்தையும், உயிர்ப்பின்பத்தையும், ஊற்றின்பத்தையும் ஒரு சேர வழங்கியது. அதனால் அவன் சோழனின் உறந்தைப் பெருந்துறையில் நுண்ணிய கருமலை நீண்டு படிந்தாற்போல,

நன்னெறி யவ்வே நறுந்தண் ணியவே (குறு.116:4)

என்று புகழ்கின்றான்.

இளமை நலமிக்க தலைமகள் இருபுறமும் ஒடுங்கிய கூந்தலை உடையவள், நறுந்தண்ணீரள், முயங்குங்கால் அணை மெல்லியள், சொல்நலங் கடந்த சுவையினள், சொல்லால் புனையும் எல்லை இல்லாதவள் என்று பாராட்டுகின்றான். இதில் இவன் சொற்கள்கூட அவன் மனவுணர்ச்சியை வெளியிடற்குரிய வன்மையில்லாது மெலிவதைக் காணலாம். (குறு.70)

ஐம்புல இன்பங்களையும் ஒருசேர நுகர்ந்தவன் தலைமகன்.

"நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிது"(குறு.62.3-4)

என்று முயக்கின்பத்திற்குத் தலைமகள் தந்த ஒத்துழைப்பையும், அவள் உறுப்புகளின் எழிலையும், அவற்றால் அவன் பெற்ற மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகின்றான்.

அகம் என்பது ஒருவனும் ஒருத்தியும் மனதளவில் உய்த்துணரக்கூடிய அறிவாகும். அது துய்த்தவரும் இன்னவாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூற இயலாததும் ஆகும். எனவே நெஞ்சுக்குச் சொல்வானாய்க் கூறும் திறன் எண்ணி எண்ணி மகிழற்குரியது.

புணரவரும் தலைமகன் வல்வில் ஓரியின் கொல்லிப் பாவை போலக் கண்டார்க்கு மடமை வரச் செய்பவள்,

பெறுவதற்கு அரியள், (குறு.100) என்கிறான். முன்னர் துய்த்த இன்பத்தை நினைந்து மீண்டும் கூடி அவ்வின்பத்தைப் பெற முனைகிறது அவன் மனம்.

பொருள் இல்லாதான் இவ்வுலக இன்பங்களை நுகர விரும்பியதைப் போல நீயும் விரும்புகின்றாய். தலைமகன்,

"நல்லோள் ஆகுதல் அறிந்தாங்கு
அரியள் ஆகுதல் அறியா தோயே" (குறு.120. 3-4)

என்று இன்னலுறும் நெஞ்சுக்கு மொழிகிறான்.

இற்செறிப்புத் தலைமகளைக் கூடப்பெறாத தலைவன் இவள் நட்பால் உண்டாய நோய்,

"இது முறை எனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறுமே" (குறு.199. 7-8)

என்று பிறப்புதோறும் தொடரும் என்கிறான். இதில் மறுமையிலும் அவளோடு இணைய விரும்பும் அவன் விருப்பினை உணரமுடிகிறது.

தலைமகளைக் கூடப்பெறாது கழியும் நாட்களைப் பதடி வைகலாய்க் கருதும் தலைமகன், புணர்ந்து நீங்கும் சூழலிலும், புணர விரும்பிய சூழலிலும் தலைமகளின் அழகு நலன்களைப் புகழ்தலையும், அந்நலன்களால் தான் பெற்ற இன்பங்களை நினைவு கூர்தலையும் காணமுடிகிறது.

பிரிவை முன்னிறுத்திய நெஞ்சுக்குக் கூறியவை:

பிரிவு வலித்த நெஞ்சோடு தலைமகன் பேசுபவை, பிரிய விரும்பும் நெஞ்சினைத் தெருட்டுபவை, செலவைத் தவிர்க்க வேண்டும் என்ற அவனது விருப்பத்தை வெளியிடுபவை.

பொருள் இல்லார்க்கு இவ்வுலக இன்பம் இல்லை ஆதலாலும், பொருளே ஒருவனைப் பொருளாகப் பண்ணும் என்பதாலும், வினையே ஆடவர்க்கு உயிர் எனப்படுவதாலும், தலைமகன் உள்ளம் தலைமகளைப் பிரிந்து பொருளீட்ட எண்ணுகிறது. அவன் உடலோ இம்மை உலகத்தில் நிலையாதது,

மறுமை உலகிற்குப் பயன்படாதது பொருள் என்று பிரிய மறுக்கிறது. உடல் வேட்கை, உள்ள வேட்கை ஆகிய இரண்டுக்குமான முரண்பாட்டை இப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

தலைமகள் தரும் இன்பத்தை எடுத்துரைத்தல், அவளைப் பிரிய இயலாத நிலையை விளக்குதல், பொருளின் நிலையாமையைச் சுட்டுதல் இப்பகுதிகளில் சொல்லப் பெறுகின்றன.

இப்பாடல்களில் பிரிவதால் பெறும் பொருள் வளமும், பிரியாது பெறும் இன்ப நலமும் ஒப்பிடப் பெறுகின்றன.

குறுந்தொகையில் பிரிவு வலித்த நெஞ்சுக்குத் தலைமகன் கூறுவதாக 9 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

ஒரு பாடலில் தலைமகள், கல்கெழு காவலர் நல்குறுமகள், உறுதோறுயிர் தளிர்ப்பத் தீண்டலால் அமிழ்தம் போன்றவள். இம்மை, மறுமை என்னும் இருமைக்கும் இன்பம் நல்கும் பொருள், அமிழ்தம். எனவே இவளை விடுத்துப் போய்ப் பெறும் பொருள் யாதுளது? என்கிறான்.

பொருள்தரும் இன்பத்திலும் இவள்தரும் இன்பம் பெரிதும் மகிழ்வைத் தருவது என்பதுணர்ந்த தலைவன்,

"அரும்பிய சுணங்கின் அம்பகட் டிளமுலைப்
பெருந்தோள் நுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே" (குறு.71. 2-4)

என்று பாராட்டுகிறான்.

வறியோர் இன்மை தீரக் கொடுத்தலும் ஐம்புல இன்பங்களை நுகர்தலும் பொருள் இல்லோர்க்கு இல்லை என்று, பொருள் செய்தற்குரிய தொழிலையே மிகுதியும் எண்ணுகின்ற நெஞ்சிடம்,

"அவ்வினைக்கு, அம்மா அரிவையும் வருமோ
எம்மை உய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே"(குறு. 63. 3-4)
என்று வினவுகிறான். தலைமகளைப் பிரிய இயலாமையைப் புலப்படுத்துகின்றான். பொருள் பிரிவில் அவளும் உடன் வருவாளாயின் நலமாம் என்பான்,

"நன்றே நெஞ்சம் நயந்தநின் துணிவே" (குறு.347.6)
என்று தன் விருப்பத்தை வெளியிடுகிறான்.

வேனிற்காலத்தில் தண்மையும், பனிக்காலத்தில் வெம்மையும் விரும்புவது மக்களியல்பு. தலைமகளோ வேனிலில் பொதியமலையில் தோன்றிய சந்தனத்திலும் தண்மை மிக்கவள், பனிக்காலத்திலோ தாமரை மலரின் உள்ளகம் போன்று சிறிய வெம்மையும் உடையவள். ஆகவே தலைமகள் தனக்குத் தேவையான தண்மையும், வெம்மையுமாய் இருப்பதைச் சுட்டிப் பிரிய இயலாதென்கின்றான். (குறு.376)

நெஞ்சை,

"குன்றுகெழு சிறுநெறி அரிய என்னாது
மறப்பருங் காதலி யொழிய
இறப்பல் என்பது ஈண்டு இளமைக்கு முடிவே "
(குறு.151. 4-6)

கழிந்த இளமையை மீண்டும் பெற இயலாது. ஆதலின் பிரியின் பொருளீட்டுங் காலத்து இளமை கழியுமே என்று இரங்குகிறான்.

நறுந்தண்ணியள் நல்மாமேனியள், பணைத்தோளினள் என்று அவளிடம் பெற்ற இன்ப நலனை நினைவு கூர்ந்து, இத்தகையாளைப் பிரியின் வாழ்தல் இலமே என்று பிரிதலருமை சுட்டுகிறான். (குறு.168)

முன் தோன்றினாரை முன்னர்க் கொல்லலும், பின்னர்த் தோன்றினாரைப் பின்னர்க் கொல்லலும் ஆகிய மரபின்றிக் கொல்வது கூற்றின் தொழில். இளையார், மாதர், அறிஞர் என்ற கண்ணோட்டமின்றிக் கொல்லும் அறனில் கோள். எனவே

இத்தகைய கொலைத் தொழிலை நன்குணர்ந்தவர்கள், உலகத்துப் பயன்மிக்க வளமெல்லாம் ஒருங்கே ஒருபொழுதிலே கிடைப்பதாய் இருப்பினும்,

"கரும்பின், கல்லெறி கடிகைக் கண்ணயின் றன்ன
வாலெயிறு ஊறிய வசையில் தீம்நீர்க்
கோலமைக் குறுந்தொடிக் குறுமகள் ஒழிய
ஆள்வினை மருங்கிற் பிரியார்" (குறு.267. 2-6)

இவ்வாறு தலைமகன் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்பதை உணர்த்த தலைமகளைப் பிரிதல் நன்றன்று என்று நெஞ்சுக்கு வலியுறுத்துகின்றான்.

ஓரிடத்தில் பொருளின்பத்தையும், தலைமகளிடம் பெறும் இன்பத்தையும் ஒப்பிட்டுக் கூறும் திறம் எண்ணத் தக்கது. கடல்சூழ் உலகில் பெறும் இன்பம் பொருளால் ஆனது, பொருள் உள்ளளவு மட்டும் பெறக்கடவது.

வானவர் உலகத்தில் பெறும் இன்பம் செய்த அறத்தால் எய்தப் பெறுவது, அறப்பயன் உள்ளளவு மட்டும் பெறக்கூடியது. ஆனால் தலைமகளின் தோளோடு தோள் மாறுபட்டுத் தழுவிப்பெறும் இன்பமோ அன்பால் கிடைப்பது, இறப்புவரை தொடர்வது. எனவே நெஞ்சிடம்,

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டுந் தூக்கிற் சீரசா லாவே
பூப்போல் உன்கண் பொன்போல் மேனி
மாண்வரி அல்குல் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே" (குறு.101)

என்று ஒப்பிடுகிறான். இதில் பொருளின்பம், அறத்தால் வருமின்பம் இரண்டிலும் மிக்க இன்பமுடையதாய்த் தலைமகள் தருமின்பம் அமைகிறது.

தலைவன் தன்னெஞ்சோடு பேசும் பேச்சுக்கள் தன் ஆழ் மனவுணர்வை வெளிப்படுத்துபவை.

புணர்ச்சியை முன்னிறுத்திய கூற்றுக்கள் தலைவியிடம் பெற்ற இன்பத்தை நினைவு கூர்பவை, அதை மீண்டும் பெறவேண்டும் என்ற விருப்பத்தை வெளியிடுபவை.

பிரிவை முன்னிறுத்திய நெஞ்சோடு பேசுபவை, தலைவியைப் பிரிய இயலாமையைப் புலப்படுத்துபவை. பொருளின்பத்திலும் பிரியாது கூடிப்பெறும் இன்பம் மிக்க மகிழ்வளிப்பது என்று ஒப்பிடுபவை.

பின்னதில் கவிஞன் கூற்றுமுறையில் நெஞ்சை முன்னிலைப்படுத்திக் கூறுவனவாய் அமைந்துள்ள பாடல்கள் சமூக மதிப்பைக் கருதும் உள்ளத்திற்கும், தன் இன்பத்தைக் கருதும் உடலுக்குமான முரண்பாட்டைத் தெளிவுபடச் சொல்பவை எனில் மிகையன்று.



# சீவக சிந்தாமணி காட்டும் அரசியல்

பேரறிஞர் ப. பழனியம்மாள்.

முன்னுரை:

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான "சீவக சிந்தாமணி இடைக்காலத்தில் தோன்றிய தமிழ்க் காப்பியம். இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவர்"[1] "முந்நீர் வலம்புரி" (சீவ.5) என்ற பாடலின் பொருள் கொண்டு திருத்தக்கதேவரைச் சோழர் குலம் எனக் கொள்பவரும் உளர்"[2] சோழர்குலம் என்பதால் இக்காப்பியம் தோன்றிய காரணத்தை ஒருவாறு உய்த்துணரலாம். பல்லவப் பேரரசு வீழ்ச்சி அடைந்து சோழப்பேரரசு நிலைபெற்றது. "சோழப்பேரரசு எப்படி அமையவேண்டும் என வழிகாட்டவும் ஒடுங்கிய நிலையிலிருந்து உயர்ந்த நிலையைப் பெறப் பல அரச குடும்பங்களோடு மணவுறவு கொண்டு, அதனால் வலிமை பெற்றுச் சிந்தாமணிக் காப்பியத் தலைவன் சீவகன் போன்று உயரவேண்டும் என்று திருத்தக்கதேவர் அறிவித்திருக்கிறார்"[3]. ஆட்சித்தலைவன் தன்னலமற்றவனாக இருக்க வேண்டும். மக்களின் வாழ்வையும் நாட்டின் நன்மைகளையும் நோக்கமாகக் கொண்டு ஆட்சிசெய்ய வேண்டும். இத்தகு ஆட்சித்திறனுடைய நாடு சிறப்புறும். சீவக சிந்தாமணியில் மூன்று மன்னர்களின் ஆட்சி முறைகளைக் காணலாம். அவை,

1. சச்சந்தனின் ஆட்சி
2. கட்டியங்காரனின் ஆட்சி
3. சீவகனின் ஆட்சி

இம்மூன்று மன்னர்களும் இராசமாபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஏமாங்கத நாட்டை ஆண்டனர். வேறுபல அரசுகள், அரசர்கள் பற்றிய செய்திகள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. ஆயினும் இம்மூவர் ஆட்சியில் மட்டுமே விரிவான, விளக்கமான அரசியல் நெறிமுறைகளைக் காணமுடிகின்றது.

1. சச்சந்தனின் ஆட்சி :

காப்பியத் தலைவன் சீவகனின் தந்தை சச்சந்தன். சிறந்த அறநெறியாளன். நாட்டில் நல்லாட்சி நடத்தினான். பகைமன்னர்களை வெற்றிகொண்ட பெரும் போராளன். தன்னை நாடிவந்தவர்களுக்குச் செல்வங்களை அள்ளி வீசி அறம்பல செய்த கொடையாளன். அதனால் இயற்கை வளமும் செயற்கை நலனும் செறிந்திருந்த ஏமாங்கத நாட்டில் மக்கள் பசியும் பிணியுமின்றி நிறைவாழ்வு வாழ்ந்தார்கள். ஏமாங்கத நாட்டின் செழுமைகளைப் பாடுவதன் வாயிலாக ஆசிரியர் சச்சந்த மன்னனின் செங்கோலாட்சியைப் புலப்படுத்தியுள்ளார்.

ஏமாங்கதமென்னும் இன்பநாடு

ஏமாங்கத நாட்டில் எல்லாச் செல்வங்களும் நிறைந்திருந்தன. அதனால் இணையற்ற ஓர் இன்பநாடாகவே திகழ்ந்தது. நாட்டுமக்கள் எல்லோரும் வேண்டிய இன்பங்களைப்பெற்று அமைதியுடன் வாழ்க்கை நடத்தினர். யாவரும் அறநெறியிலிருந்து பிறழாதும் வாழ்ந்தனர். அந்நாட்டிலுள்ள ஊர்களில் எவரையும் விலக்காத உணவுச்சாலைகள் ஆயிரம் இருந்தன. வெப்பத்தை நீக்கும் கருநெல்லி இருக்கும் சுனையிலிருந்து எடுத்த நீரும், அணிய மலரும், பூசச் சந்தனமும் வைத்துள்ள தண்ணீர்ப் பந்தலும் ஐம்பொறிகளும் நுகரும் பொருளெலாம் நிறைந்திருந்தன. (சீவ.76) இவ்வாறு வாழ்விற்குத் தேவையான அனைத்தையும் அனைவரும் பெற்றிருந்ததால் எல்லோரும் தத்தம் ஒழுக்கத்தில் தவறாது தக்காராய் விளங்கினர். வீடுபேற்றை விரும்பித் தவம் மேற்கொண்டவர் தவம் செய்தனர். இல்லறத்தை நாடியவர் இனிதே இல்லறம் நடத்தினர். நிலைத்த செல்வமாகிய கல்வியைப்பெற விரும்பியவர் கற்று அறிவைப் பெருக்கினர். இவ்வாறு எத்தகைய ஒழுக்கம் உடையவர்க்கும் ஏமாங்கதம் ஏற்ற இடமாகத் திகழ்ந்தது என்பதற்கு,

"நற்றவம் செய்வார்க்கு இடம் தவஞ்செய்வார்க்கும் அஃது இடம்
நற்பொருள் செய்வார்க்கும் இடம் பொருள் செய்வார்க்கும் அஃது இடம்

வெற்ற இன்பம் விழைவிப்பான் விண்ணு வந்து வீழ்ந்தென
மற்ற நாடு வட்டமாகு வைகுமற்ற நாடரோ " (சீவ.77)

என்ற பாடல் சான்றாகத் திகழ்கின்றது. விண்ணுலகமே மண்ணுலகில் வந்து பொருந்தியதோ என்று கண்டோர் வியக்கும் அளவிற்கு ஏமாங்கதநாடு இன்பம் நிறைந்து விளங்கியது என்பர் திருத்தக்கதேவர். இதனால் ஏமாங்கத நாட்டில் மக்கள் அவரவர் விரும்பும் செயலையும் ஒழுக்கத்தையும் மேற்கொள்ள உரிமை உண்டு என்பது தெளிவாகின்றது. அதோடு "மக்களுக்குப் பல்வகை உரிமைகளை நல்குகின்ற நாடே நாகரிகம் நிறைந்த நாடாகும். ஒரு நாட்டில் அவரவர் அறிவுக்கும் கருத்துக்கும் ஆற்றலுக்கும் அன்பிற்கும் ஏற்ற செயலை மேற்கொள்ள உரிமை வேண்டும். அவ்வுரிமை இருந்தாலன்றி உலகம் ஓங்காது. மக்களுக்கு உரிமைகளைக் குறைத்து அவர்களை அடக்கி ஒடுக்கி ஆளுகின்ற நாடு நாளடைவில் அழிவுபெறுமேயன்றி ஆக்கம் பெறாது"[4] என்பதை உணர்த்த சச்சந்த மன்னன் தன் நாட்டு மக்களுக்கு எல்லா உரிமைகளையும் அளித்து ஆக்கமடையச் செய்தான். அதனால் அவனுடைய ஏமாங்கத நாடு அவணியில் ஒப்பற்ற நாகரிகம் நிறைந்த நாடாகத் திகழ்ந்தது.

## பண்புடைய வேந்தன்

சச்சந்த மன்னன் அரசருள் ஏறாகத் திகழ்ந்தான். அதோடு பேராண்மை உடையவனாகவும், நாட்டு மக்களுக்குத் தந்தையாகவும் தண்ணளி செய்பவனாகவும், இறையாகவும் செயல்பட்டான்.

## பேராண்மையன்

அரசாட்சி என்பது மக்களுக்காக அமைக்கப்படுவது. அரசன் பகைத்துப் போர் செய்தலும், அன்புடன் உறவாடுதலும் பொதுநலத்தின் பொருட்டேயாகும். நாட்டுமக்கள் கவலையின்றித் தத்தங் கடமைகளைச் செய்ய வேண்டுமென்றால் நாட்டில் அமைதி நிலவவேண்டும். பகையரசர்களால் நாட்டிற்கு நலிவு ஏற்பட்டு விடக்கூடாது. அதற்கு மன்னன் வீரத்தோடும் ஆண்மையோடும் அருளோடும் செயல்பட வேண்டும். அரசன் தன் பகை மன்னர்களை வீரத்தாலும் படைபலத்தாலும்

அச்சப்படுத்த வேண்டும். தன்னை நாடிவரும் நட்புடைய அரசர்களைத் தனது அன்பாலும் அளியாலும் தழுவிச்செல்ல வேண்டும்.இதற்கேற்ப அரசன் சச்சந்தன் வீரமும் அருளும் உடையவனாக ஆட்சி செய்தான். அதனால் ஏமாங்கத நாட்டில் அமைதி நிலவியது. மன்னனின் ஆற்றலை,

"நச்சு நாகத்தின் ஆரழற் சீற்றத்தன்
அச்சம் உற்று அடைந்தார்க்கு அமிர்தன்னவன்
..............................................................................
சச்சந்தன் எனும் தாமரைச் செங்கணான்" (சீவ. 157)

என்ற பாடல் புலப்படுத்துகிறது. வேந்தருக்கு அளியினும் தெறலே சிறத்தலின் நச்சுநாகத்தின் சீற்றத்தன் என்று முதற்கண் கூறப்பட்டுள்ளது. எனவே செருக்குற்றுப் பகைத்தார்க்கு நாகச்சீற்றத்தன்; ஆரழற் சீற்றத்தன் என்றதனால் மன்னனுடைய பேராண்மையும் ஊராண்மையும் வெளிப்படுகிறது. இதற்கு அரணாக,

"பேராண்மை என்பதறுகண் ஒன்றுற் றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு"[5]

என்ற குறள் நெறியும் காணப்படுகிறது.

தந்தையன்:

உலகம் ஒரு குடும்பம் என்பது போல மன்னன் தன்னுடைய நாட்டை ஒரு குடும்பமாகக் கருதினான். அக்குடும்பத்தின் தந்தையாக மன்னன் செயல்பட்டான். குடிமக்களிடம் கைம்மாறு கருதாமல் அன்பு காட்டினான். குளிர்ந்த வெண்கொற்றக் குடையால் கடல் சூழ்ந்த உலகிற்கு ஒப்ப நிழல் செய்தான். அதனால் அவனுடைய ஆட்சியில் வாழ்வதற்கு விரும்பி அவன்மீது கொண்ட காதலால் இவ்வுலகம் களிக்கிறது. சச்சந்த மன்னனின் பெருமையை,

"தாதையே அவன் தாள் நிழல் தங்கிய
காதலால் களிக்கின்றது இவ்வையமே" (சீவ. 159)

என்று திருத்தக்கதேவர் சிறப்பித்துள்ளார். இவ்வாறு ஆசிரியர் 'தாதையே' என்று சச்சந்தனுக்குக் கூறியதைக் கம்பர் சிறிது மாற்றித் தயரதனைத் 'தாயொக்கும் அன்பின்'[6] என்று பாடியிருப்பது நோக்கற்குரியது.

தண்ணளியன்

ஒப்பற்ற வேந்தன் குடிமக்களுக்கு எவ்வாறு பயன்பட்டான் என்பதைக் கூறவந்த கவிஞர்,

"உலகிற்கு நிழல் செய்தலாகிய தண்ணளியால் தருமன்
கலியை மாற்றின ஈகையால் வருணன் அழலும்
சீற்றத்தால்
உயிரை மாற்றுதலில் கூற்றுவன் கலைக்கு
இடமாகிய அருமையால் வாமன் மகளிர்க்கு
அணங்காகிய அழகால் காமன் " (சீவ.160)

என்று வர்ணித்துள்ளார். அரசனது தொழில் உலகிற்கு அளிசெய்தலாகும். அதற்குத் தெளிவான அறிவும், நடுவு நிலைமையும், முறைவேண்டுவார்க்கும் குறை வேண்டுவார்க்கும் எளிதாகவும் இனிதாகவும் உதவும் பண்பும் மன்னனிடம் இருந்தது. இவ்வாறு அரசனுக்குரிய பண்புகள் அனைத்தையும் ஒருசேரப் பெற்ற சச்சந்த மன்னனுடைய ஆட்சி மக்கள் விரும்பிய ஆட்சியாக இருந்தது.

இறைவன்

"உலகத்தைக் காக்கின்ற வேந்தனிடம் ஓர் ஒளி உண்டென்றும், அவ்வொளியே உலகைக் காக்கும் பெருந்திறமென்றும், அவ்வொளியே அவர்மாட்டுள்ள தெய்வத் தன்மையை உணர்த்துமென்றும் தமிழ்நூல்கள் கூறுகின்றன"[7] இக்கருத்திற்கு ஏற்ப மனுநெறியும்,

"அரசன் மற்றவர்களை விட ஒளி உடையவனாகவும்
ஆட்சித்திறன் உடையவனாகவும் திகழ்கின்றான்"[8]

என்று எடுத்துரைக்கிறது. இவ்வாறு உலகத்தார்க்கு நலம் செய்யும் உள்ளொளி நிகழ்ச்சியே அரசோச்சுதலாகும். மன்பதை காக்கும் மன்னனின் இயல்பை,

"உறங்குமாயினும் மன்னவன் தண்ஒளி
கறங்கு தென்திறை வையகம் காக்குமால்" (சீவ.248)

என்று சிந்தாமணி எடுத்துரைக்கிறது. "உடல் இளைப்பாறும் பொழுது உயிர் உறங்காமல் இருந்து உடலைக் காக்குமாறு

போல அரசன் குடிகளைக் காக்கின்றான். அவனுடைய ஆணை காக்கின்றது"[9] என்னும் அறிஞர் கருத்திற்கேற்ப சச்சந்த மன்னன் ஆட்சி செய்தான். மணிமுடி அணிந்து மாண்பெய்தும் அரசன் தேவர்களாகவே கருதப்பட்டதால்,

"பலவும் மிக்கனர் தேவரிற் பார்த்திவர்" (சீவ.246)

என்று தேவர் கூறியுள்ளார். இதனை அறிந்த நன்மக்களும் அரசன் வெறுக்கத் தகுவனவற்றை மனத்தாலும் நினைக்கவில்லை.

கழிகாமன்

சச்சந்த மன்னன் தன் மனைவியின் மீது தணியாக்காதல் கொண்டான். ஒருவர்பால் ஒருவர் கொண்ட காதலால் ஒருடம்பினர் ஆயினர். அந்நிலையில் விசயை தாமரை மலர் போன்றாள். சச்சந்தன் தாமரை மலரின் செவ்வி கெடாமல் தேனைப் பருகும் வண்டு போன்றான். இவ்வாறு அவர்களுடைய காம நுகர்ச்சி முடிவின்றி நிகழ்ந்தது. மழைக்காலத்து முகில்போல இடைவிடாமல் விசயைக்கு இன்பம் நல்கினான். அவனுடைய காமம் கடலினும் மிக்கதாயிற்று. அவன் துய்த்த காதல் இன்பத்தை,

"படுதிரைப் பவழவாய் அமுதம் மாந்தியும்
கொடிவளர் குவிமுலைத் தடத்துள் வைகியும்
இடியினும் கொடியினும் மயங்கி யாவதும்
கடிமணக் கிழமையோர் கடலின் மிக்கதே" (சீவ.196)

என்று சிந்தாமணிச் செய்யுள் சுவைபடக் கூறுகிறது. இவ்வாறு நாடாளும் மன்னன் ஈடில்லாக் காதல் இன்பத்தில் மூழ்கித் திளைத்தான். சச்சந்தன் பிற ஒழுகலாறுகளில் தூயோன். ஆனால் தன் இல்லாளை அமுதாகக் கருதி அந்தப்புரத்தில் ஒடுங்கினான். தன் அரசியல் கடமைகளை மறந்தான். பெண்ணின்பம் விண்ணும் அமிழ்தும் விலை கொள்ளுமாறு சிறந்ததே எனினும் அரசின்பம் அதனினும் சிறந்தது என்பதை அறியாத வனாயினான். காதலின்பத்தில் தான் அரசன் என்பதை மறந்து தன் ஆட்சிப் பொறுப்பைப் பொருட்படுத்தாதவன் ஆயினான். இஃது அவன் செய்த பெருந்தவறாகும்.

கூறாதன கூறினான்

ஆட்சித்தலைவர்களும் ஆசை, பாசங்களுக்கு உட்பட்டவர்களே. "அதனால் பொதுமக்கள் போல அரசனும் செயல்படலாம் என்று கருதக் கூடாது. ஆட்சித்தலைவனாக இருப்பவனுக்கு இன்ன பொருளிடத்து ஆசை உண்டு என்று புறத்தே தெரிந்துவிடக் கூடாது. தன் விருப்பமும் வேட்கையும் இன்ன பொருளிடத்து என்று பிறர் அறியாவண்ணம் ஆட்சித் தலைவன் துய்த்தல் வேண்டும்"[10] இக்கருத்தை அரண் செய்வதுபோல,

"காதல் காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில் ஏதிலார் நூல்"[11]

என்று குறளும் கூறுகிறது. அரசியல் கடமைகளைப் பெருஞ் சுமையாகக் கருதிய சச்சந்த மன்னன் அமைச்சர்களுள் ஒருவனாகிய கட்டியங்காரனை நம்பினான். ஒரு நாள் கட்டியங்காரனிடம்,

"அரிஞ்சயனுடையகுலத்தில் தோன்றியவளும், வரத்தினால் பிறந்தவளும், வானுலக அமிர்தம் போன்றவளும் என்னை மணந்தவளுமாகிய விசயையைப் பிரிதற்கியலேன்" (சீவ. 201)

என்று கூறினான். சச்சந்தனின் கருத்தை உணர்ந்த கட்டியங்காரன் 'மிகப் பெருங்காதலாளுடன் இன்பம் நுகர்க' அடியேன் நாட்டில் பழிச்சொல் உண்டாகாதவாறு காவல் சுமையைப் பூண்பேன் என்றான் என்பதை,

"கழிபெருங் காதலாள்கண் கழிநலம் பெறுக வையம்
பழிபடா வகையில் காக்கும் படுநுகம் பூண்பல் என்றான்"
(சீவ.103)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இவ்வாறு மன்னன் தன் அகவாழ்வுச் செய்திகளைக் கட்டியங்காரனிடம் கூறியது மற்றொரு பெருந்தவறாகும்.

திரு நீங்கினான்

முடியாட்சி என்பது பரம்பரையாகத் தொடரும் ஆட்சியாகும். நாடாளும் உரிமை திருவுடை மன்னனுக்கே உரியது. அகவை முதிர்ச்சியால் அரசுப் பணிகளை ஆற்ற இயலாத நிலை ஏற்படுமாயின் மூத்த மகனுக்கே அரசுரிமை

வழங்கப்பட வேண்டும். இதற்கு மாறாக மற்றொருவன்மேல் ஆட்சி உரிமையை ஏற்றினால் அறமும் திருவும் நீங்கும். பூவின்மேல் எழுந்தருளியுள்ள நான்முகனாகவே இருந்தாலும் அவனால் அறம் சிதையுமாயின் அவனும் சிதைவது உறுதி. இதுவே அரசநீதி. இதனை,

"பூவின்மேல் புனிதற்கேனும்
அறத்தினது இறுதி வாழ்நாட்கு
இறுதி; அஃது உறுதி"[12]

என்று கம்பர் பாடியுள்ளார். காமக்கடலில் மூழ்கிய சச்சந்தன் அரசுரிமையை அமைச்சன் கட்டியங்காரனுக்கு அளித்தான். முடியும் குடையும் ஒழிந்த பிற சிறப்புக்களை எல்லாம் செய்தான். அதோடு,

"...........................................வேந்தன் நீயாகி வையம்
இசைபடக் காத்தல் வேண்டும் இளங்குபூண் மார்ப" (சீவ. 201)

என்றும் கூறினான். அதனை முரசறைந்து நாட்டு மக்களுக்கெல்லாம் அறிவித்தான். இவ்வாறு ஆட்சி உரிமையை மற்றொருவன் மேல் ஏற்றியதால் நிலமும் திருவும் சச்சந்தனை விட்டு நீங்கின. சச்சந்த மன்னன் அறம் பேணியவன்தான். ஆனால் சமுதாய அறம் சிதைய நடந்து கொண்டதால் அவனுடைய வாழ்நாளுக்கு இறுதி நேர்ந்தது. அறம் சிதைந்தால் வாழ்வும் சிதையும் என்பது உறுதி.

### அமைச்சர் சொற் கேளான்

மக்களை நன்னெறியில் செலுத்தும் அரசன் அமைச்சர்களைத் தனக்குத் துணையாகக் கொள்ளவேண்டும். அமைச்சரும் புரோகிதரும் அரசனுக்கு ஆட்சிப் பணியில் அறிவுரை வழங்குவோராவர். இவர்கள் துணையின்றி மன்னன் கோலோச்சக் கூடாது. இதனை,

"மன்னன் நீதிகள் அறிந்தவனாயினும் எதன் தீர்ப்பையும்
அமைச்சர்களிடம் வணங்கிக்கேட்டறிவது நலம், ஏனெனில்
அமைச்சரின் துணிபுகள் ஆக்கம் தருவனவாகும்"[13]

என்று மனுதருமம் எடுத்துரைக்கின்றது. அமைச்சர் புரோகிதர் கூறும் நல்லுரைகள் ஊழையும் உப்பக்கம் காணும் ஆற்றலுடையன. ஆதலால் அத்தகையோரிடத்து அன்பு

செலுத்தி அவர்களுடைய விருப்பத்தைப் பெறும் மன்னன் அகப்புறப்பகைகளை வென்று ஏற்றமுடையவன் ஆவான். எனவே திருத்தக்க தேவர், மதி அமைச்சரின் அறிவுரைகளைக் கேட்பார்க்கு நன்றேயன்றித் தீது வராது என்று குறிப்பிட்டுள்ளார். இதனை,

"காவல!
நாவலர் சொற் கொண்டார்க்கு நன்கலால் தீங்குவாரா"
(சீவ.206:2)

என்னும் பாடலடி வலியுறுத்துகிறது. ஆனால் அரசன் சச்சந்தன், அமைச்சர்களில் அறிவிற்சிறந்த கேள்வியை உடைய நிமித்திகன் கூறிய அறிவுரைகளை ஏற்க மறுத்தான். மற்றொரு அமைச்சனாகிய உருத்திரதத்தனும் உயர்ந்த அறிவுரைகளைக் கூறினான். அமைச்சர்களின் உரை கேட்ட மன்னன்,

"தாயின் கருவில் பதிகின்ற பொழுதே அவரவர்க்கு உரிய போகமும் வாழ்நாளும் அளந்தன. எனவே அறிவுரைகள் கூற வேண்டாம்" என்று கூறினான். (சீவ.213)

அதனால் அரச பதவியை இழக்கும் அவல நிலைக்கு ஆளானான்.

*அவலவீரன்*

"காப்பியத்தில் பெரும்பாலான கனவுகள் பின்வரக்கூடிய நிகழ்வுகளை முன் கூட்டியே உணர்த்தப் பயன்படுகின்றன"[14] இக்கருத்தின் அடிப்படையில் விசயை கண்ட கனவும் அமைந்துள்ளது. மன்னன் சச்சதனுக்குப் பின்பு நிகழப் போகும் பெருந்துன்பம் விசயை தான் கண்ட கனவை மன்னனிடம் கூறியபொழுது அதற்குரிய பலனை அறிந்து வேண்டாததை மறைத்து, அவளிடம் விரும்பத்தக்கதை மட்டும் கூறினான். மயிற்பொறியில் ஊர்ந்து செல்ல அவளுக்குப் பயிற்சி அளித்தான். ஆனால் கட்டியங்காரனின் சூழ்ச்சிகளை ஆராயவோ, தன்னைக் காத்துக்கொள்வதற்கு வேறு முயற்சிகளைச் செய்யவோ அவன் மேற்கொள்ளவில்லை. கட்டியங்காரனின் படைகள் அரண்மனையை முற்றுகை இட்டபொழுது தன் மனைவி விசயைக்கு இளமை, யாக்கை, செல்வம் ஆகியவற்றின் நிலைமையை எடுத்துரைத்தான்.

மேலும்,

"மங்கை நீ நடக்கல் வேண்டும்
நன்பொருட்கு இரங்கல் வேண்டாம்" (சீவ.267)

"தொல்லை நம் பிறவி எண்ணின்
தொடுகடல் மணலும் ஆற்றா" (சீவ.270)

"உரிமை முன் போக்கி அல்லால்
ஒளியுடை மன்னர் போகார்
கருமம் ஈது எனக்கு" (சீவ.272)

என்று அறிவுரை கூறித் தன் மனைவியை அனுப்பினான். இதனால் அவனுடைய தெள்ளிய அறிவு வெளிப்படுகின்றது. அதனால் அவன் தான் செய்த தவறை உணர்ந்திருப்பான் என்று எண்ணுவதற்கும் இடமுண்டாகின்றது. ஆனால் நடந்ததை நினைத்து வருந்துவதால் யாது பயனெனக் கருதி, பகைவர் வந்து சூழ்ந்த பொழுது தனித்து நின்று போர் செய்தான். எனினும் இறுதியில் சிறைப்பட்டான். அவல வீரனாகக் காட்சியளித்தான்.

சச்சந்தனின் வீழ்ச்சி:

அரசர்க்கு உரிய பண்புகளுள் ஒன்று மானமுடைமை. அதனை வள்ளுவர்,

"மானம் உடையது அரசு"[15]

என்று வலியுறுத்தியுள்ளார். மானம் என்பது தன்குடி, தன்நாடு முதலியவற்றின் பெருமையையும் உலக வாழ்க்கைக்கு அடிப்படையான உயர்ந்த கொள்கைகளின் பெருமையையும் காக்கப் பயன்படுவதே அல்லாமல் தன்னல அடிப்படை கொண்ட தன்பழி, தன்புகழ், தன்ஆக்கம், தன்கேடு என்பனவற்றைப் பொருளாகக் கொள்வதன்று. தன்னைவிடத் தன்குடி பெரியது, அதைவிட நாடு பெரியது, அதைவிட உலகம் பெரியது, அதைவிட உலக வாழ்விற்கு அடிப்படையான ஒப்புரவு பெரியது என்று எண்ணுவதே மானமாகும்.[16] இந்த உண்மையை உணர்ந்தவன் ஏமாங்கத நாட்டு மன்னன் சச்சந்தன். தன்னால் அரச பதவி பெற்ற கட்டியங்காரன் படையொடு வந்ததை அறிந்தவுடன் எவ்வகைத் துணையும் இல்லாதிருந்த தன் நிலையை உணர்ந்தான். கூரிய வாளை வீசிக் கட்டியங்காரன்

ஊர்ந்து வந்த மதயானையை வீழ்த்தினான். சச்சந்தனின் மார்பில் வீரர்களின் படைக்கருவிகள் பாய்ந்தன. அப்பொழுதும் மனம் தளராது யானைகளின் துதிக்கைகளை வெட்டி, வாளும் ஒடிந்து நின்றான். பின்னர் தன் மெய்யில் ஆழியும் வேலும் அழுந்துதலால் மெய்வலிமை குறைந்து மண்ணில் வீழ்ந்து சச்சந்தன் மாண்டான். மானமே பெரிதெனக் கருதிய மன்னன் வீர மரணமடைந்தான். நாட்டுக்கும் மக்களுக்கும் தாழ்வு வராமல் காப்பது மன்னனின் கடமையன்றோ.

-தொடரும்

அடிக்குறிப்புகள்

1. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு, 9ஆம் நூற்றாண்டு, ப.53
2. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், சமணத்தமிழ் இலக்கிய வரலாறு, ப.66
3. தா.வே. வீராசாமி, *சீவகசிந்தாமணி, தமிழ் இலக்கியக் கொள்கை*, ப.1
4. தா.ஏ. ஞானமூர்த்தி, அவலவீரர்கள், ப.45
5. குறள், 773
6. கம்ப. அரசியல் 4:11
7. ரா.பி. சேதுப்பிள்ளை, திருவள்ளுவர் நூல் நயம், ப.56
8. மனுதருமம், 7:8
9. அ.ச.ஞானசம்பந்தன், கம்பன் நோக்கில் நாடும் மன்னனும், ப.57
10. ம.ரா.போ.குருசாமி, கம்பர் முப்பால்,ப47
11. குறள் 440
12. கம்ப. 4129
13. மனுதருமம், 7:39
14. ச.வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன், ப.125-126
15. குறள். 384
16. மு.வரதராசனார், திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ப.233-234

# தொல்காப்பிய வண்ணநோக்கில் தேவாரம் அமைந்தவிதம் ★

வித்துவான் தா.குருசாமிதேசிகர்.

## முன்னுரை

பாவினிடத்தில் நிகழும் சந்த வேறுபாடு வண்ணம் எனப்படும். இதுபற்றிய இலக்கியங்கள் முன்பு இருந்திருக்க வேண்டும். நம் தொல்காப்பிய இலக்கணநூல் முந்து நூல் கண்டு முறைப்பட உரைப்பது. பேராசிரியர் சங்கப்பாட்டில் வண்ணங்களுக்கு எடுத்துக்காட்டுத் தருகிறார். பிற்காலத்தில் வண்ண இலக்கணம் அமைந்த தேவாரம் நாட்டு மக்களைக் கிளர்ச்சி பெறச் செய்தது. திருநாவுக்கரசர்,

"வண்ணங்கள் தாம்பாடி
வலிசெய்து வளைகவர்ந்தார்"

என்று அருளுவர்.

## வண்ண வகைகள்

தொல்காப்பியர் இருபது வண்ணங்களைக் குறிப்பர். பேராசிரியர் வண்ணம் என்பது சந்தவேறுபாடு என்று உரைகூறுவர். குறில், நெடில், வல்லெழுத்து, மெல்லெழுத்து இனம் பற்றியும், அசை, சீர், அடி, தொடை உறுப்புகள் பற்றியும் வண்ணச் செய்யுட்கள் வரும். இசைத்தமிழில், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு என மூன்றாக வகுப்பர்.

## வண்ணம் மூன்று

வண்ணம் பற்றிச் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் கூறுவது,"வண்ணம் ஒருவகையான் மூவகை. பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் என.

★சென்னை அண்ணாமலை மன்றப் பண்ணாராய்ச்சிக் கூட்டத்தில் (24.12.2001) ஆய்விற்கு வழங்கப்பட்ட கட்டுரை

அவற்றுள் பெருவண்ணம் ஆறாய் வரும். இடை வண்ணம் இருபத்தொன்றாய் வரும். வனப்பு வண்ணம் நாற்பத்தொன்றாய் வரும்” என்பது. இசை நூலார் கூறும் வண்ணம் மூன்றாதல் தெளிவு. சேக்கிழார் ஆனாய நாயனார் புராணத்துள் மூன்று வண்ணங்களையும் வழிமொழிவர். திருஞானசம்பந்தர்.

“வண்ணம் மூன்றுந் தமிழிற் றெரிந்து இசைபாடுவார்
விண்ணும் மண்ணும் விரிகின்ற தொல்புகழாளரே”

என்பர். இம்மூன்றும் இசைத்தமிழ்த்துறையில் விளக்கப் படவில்லை. ஓரளவு இயலிசைவித்தகர் பி.டி.ஆர். கமலைத்தியாகராசன் தமது இசைத்தமிழின் உண்மை வரலாற்றில் முயன்றிருக்கிறார்.•

## நாடகத்தமிழில்

நாடகத்தமிழில், சுண்ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம், என்ற நான்குவகைச் சொற்கள் கூறப்படும். இவற்றில் வண்ணம் என்பது நான்கடியால் வருவது என்பர் அடியார்க்கு நல்லார். பதினாறடிகளால் இயன்ற இசைப்பாடலை வண்ணம் என்ற பெயரால் நாடகத்தமிழ் சுட்டுகிறது.

## ஆய்வாளர் கூற்று

பன்னிருதிருமுறை வரலாற்றாய்வாளர் பேராசிரியர் க.வெள்ளைவாரணர் இதுபற்றி ஆய்ந்த செய்திகள் பாராட்டிற்குரியவை.

1. கேட்போர் விரும்பிக் கொள்ளும் வண்ணம் வண்ணித்துப் பாடுவது.
2. வண்ணப்பா-அருள்வகைக்குரியது. இப்பாடலைப்பாடுவார் யாரோ அவர் அழைப்பதன்முன் அருளுவார் என்றும் விளக்கி,

‘பிழையாவண்ணங்கள் பாடிநின்றாடுவார்
அழையாமே அருள்நல்குமே’- என்ற சம்பந்தர் தேவாரம்

வண்ணப்பா அருள்வருகைக்குரியது என்று பேராசிரியர் க.வெ.அடையாளங் காட்டுவார்.

---

• இசைத்தமிழ் உண்மை வரலாறு, ப.28

1. பாவண்ணம் : இது நூற்பா வண்ணம் சொற்சீர்த்தாகி வரும் என்று தொல்காப்பியர் கூறுவர்.

எடு : தேவாரம் அனைத்துமே பத்துப்பாடல்களுடன் சொற்சீர்த்தாகி வருவன.

சொற்சீர் - என்பது வகையுளி படுத்துவது

எடு : தோடுடை யசெவி யன்விடை ஏறியோர்
தூவெண் மதி சூடி

இப்பாடலை ஓதுவார்கள் சந்தத்துடன் பாடுவது பாவண்ணம் ஆகும்.

2. தாஅ வண்ணம் : இது இடையிட்டுவந்த எதுகைத்தாகும் என்பர் தொல்காப்பியர். கந்தருவர் நலங்கள் பொதுள வருவது.

ஒருபாடல் எடுத்துக்காட்டு : சம்பந்தர் தேவாரம் :

முள்ளி நாள்முகை மோட்டியல் கோங்கின்
அரும்பு தேன் கொள் குரும்பை மூவாமருந்து
உள்ளியன்ற பைம்பொற் கலசத்திய லொத்தமுலை
வெள்ளி மால்வரை யன்னதோர் மேனியின்
மேவினார் பதிவீ மருதண் பொழிற்
புள்ளினந் துயில்மல்கு பூந்தராய் போற்றுதுமே

இப்பகுதியில் வந்துள்ள ஏனைப்பாடல்களும் இடையீடு பட்டு, வண்ணித்து எதுகையுடன் விளங்குவதைப் பாடுவார் மூலம் பார்த்தறியலாம். 'சூடினாய் நறு நெய்யொடு' என்ற மற்றொரு பதிகமும், சுந்தரரின் 'பரவும் பரிசென்று அறியேன்' என்ற பதிகமும் தாஅ வண்ணப்பாடலாகும்.

3. வல்லிசை வண்ணம் :

வல்லிசை வண்ணம் என்பது வல்லெழுத்துப் பயின்று வரும் என்பர் தொல்காப்பியர்.

எடு : நச்சரவு கச்சென வசைச் சுமதி
யுச்சியின் மிலைச் சொரு கையான்
மெய்ச் சிரமனைச் சுலகினிச்சமிடு
பிச்சையமர் பிச்சனிடமாம்
மச்சமத நச்சிமத மச்சிறுமி

யைச் செய்தவவச்சிரதக்

கொச்சை முரவச்சர் பணியச் சுரர்க

ணச்சிமிசை கொச்சைநகரே

இது சம்பந்தர் வழிமொழித் திருவிராகச் சாதாரிப்பண்ணில் அமைந்த ஒருபாடல். வல்லெழுத்துப் பயின்று வந்துள்ளது. திருத்தாளச்சதி பாடலில் சிலபாடலும் பொருந்தும்.

4. மெல்லிசை வண்ணம் : மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகும் என்பர் தொல்காப்பியர்

எடு :

ஒன்றொன் றொடொன்றும் ஒருநாக் கொடைந்தும்
இருமூ ன்றொடேமு முடனாய்
அன்றின்றொ டென்று மறிவானவர்க்கும்
அறியாமை நின்ற அரனூர்
குன்றொன்றொ டொந்து குலையென்றொடொன்று
கொடியொன்றொ டொன்று குழுமிச்
சென்றொன்றொ டொன்று செறிவானிறைந்த
திருமுல்லை வாயிலதுவே

இதுவும் சம்பந்தர் தேவாரம்

5. இயைபு வண்ணம் : இடையெழுத்து மிகுவது இயைபு வண்ணம் என்பர் தொல்காப்பியர்

எடு :

நிராமய பராபர புராதன
பராவு சிவராக வருளென்று
இராவு மெதிராயது பராநினை
புராண னமரராதி பதியாம்
அராமிசை யிராதெழி றரா யர
பராயண வராக வுருவா
தராயனை விராயெரி பராய்மிகு
தராய்மொழி விராய பதியே

இதுவும் சம்பந்தர் சாதாரிப் பண்ணாகும்.

6. அளபெடை வண்ணம் :

ஒற்றளபெடை, உயிரளபெடை என்ற இரண்டு அளபெடையும் வருவது என்பர் தொல்காப்பியர். இதற்குத் தேவாரத்தில் - திருஎழுகூற்றிருக்கையில் - 'மறைமுதல் நான்கும்.... மறுவிலாஅ மறையோர்' என்றும், 'யாழீஇ காணாஅ காமாஆ' என்ற மாலைமாற்றுப் பதிகமும் எடுத்துக்காட்டுகளாகும்.

7. நெடுஞ்சீர் வண்ணம் : நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும் என்பர் தொல்காப்பியர்

எடு :

வரமதே கொளா வுரமதே செயும்
புராமரித்தவன் பரமநாற்புரத்
தரனனாமமே பரவுவார்கள் சீர்
விரவு நின்புவியே - என்ற சம்பந்தர் பாடல் ஒன்றும், திருவியமகத் திருப்பதிகங்களும் உரியன.

8. குறுஞ்சீர் வண்ணம் : குற்றெழுத்துப் பயின்று வருவது குறுஞ்சீர் வண்ணம் என்பர் தொல்காப்பியர்

எடு :

பிடியதனுருவுமை கொள்மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும வரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவல முறையிறையே

என்பது போன்ற ★சம்பந்தரின் வியாழக்குறிஞ்சிப் பண்ணில் திருவிராகம் மட்டும் எடுத்துக்காட்டுகளாகும்.

9. சித்திர வண்ணம்: நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் ஒப்ப விரவி வருவது சித்திர வண்ணம் என்பர் தொல்காப்பியர்

எடு :

"நீலமாமிடற் றாலவாயிலான்
பால தாயினார் நாமாள்வரே"

---

★ 'பருக்கையானை' என்ற திருவாரூர் சம்பந்தர் தேவாரமும் குறில் பயின்றது.

10. நலிபுவண்ணம் : ஆய்தம் பயின்று வருவதென்பர் தொல்காப்பியர்.

எடு : 'மண்ணினல்லவண்ணம்' - வரியில்
'அஃதுறும்' எனப்பயில்வது -

11. அகப்பாட்டுவண்ணம் : இறுதியடி 'இடைய' போன்று நிற்றல் என்பர்.

எடு :
சம்பந்தர் - 'பாச்சிலாச்சிரமப்பதிகத்தில்
"மயல் செய்வதோ இவர் மாண்பே - என முடியும்
பாடல். சுந்தரர் - பொன் செய்த
மேனியினீர் பதிகமும் காட்டாக வரும்.

12. புறப்பாட்டு வண்ணம் : இறுதியடிப்புறத்தாய் தான் முடிந்தது போல் நிற்கும் என்பர்.

எடு :
சம்பந்தர் - கோளறு பதிகம் முடிவு
'அடியாரவர்க்குமிகவே' என்றும்
அப்பரின் - திருவாதிரைப் பதிகம்
'அதுவண்ணம்' என்று முடிவு கொள்வதும் காட்டுகளாகும்.

13. ஒழுகு வண்ணம் : ஒழுகிய ஓசையால் செல்வது என்பர்

எடு :
சம்பந்தர் - 'நட்டபாடை' திருவிராகப் பதிகங்கள் புயம்வளிகனல் போன்றவை.
அப்பர் - 'தலையேநீ வணங்காய்' என்பனவும் ஆகும்.

14. ஒரூஉ வண்ணம் : ஆற்றொழுக்குப் போலச் செல்வது என்பர்

எடு :
சம்பந்தர் - பியந்தைக்காந்தாரப் பாடல்கள்/ பழம்பஞ்சுரப் பண்கள் முதலியவை காட்டாகும்.

15. எண்ணுவண்ணம் : எண்ணாகப் பயின்று வருவது என்பர்.

எடு :

மேவில் ஒற்றர் விரிவுற்ற இரண்டின் மூன்றுமாய்
நாவினாலர் உடலஞ்சிர் ஆறர் ஏழோசையர்
தேவிலெட்டர் திருவாஞ்சிய மேவிய செல்வர்
பாவந்தீர்ப்பர் பழிபோக்குவர் தம்மடியார்க்கே

இதுபோன்றே, அப்பரின் ஒன்று கொலாம் பாடல், சம்பந்தரின்-எழுகூற்றிருக்கை, திருவாசகம் வானாகி மண்ணாகி பாடலும், நான்ககவலில் வரும் எண்களும் ஆகும்.

16. அமைப்பு வண்ணம் : அறுதறுத்துப் பயின்று வருவது என்பர்.

எடு :

சம்பந்தர் : மறம்பய மலைந்தவர் மதிற்பரிசறுத்தனை
நிறம்பசுமை செம்மை யோடிசைந்துனது நீர்மை
திறம்பயனுறும் பொருடெரிந்துணரும் நால்வர்க்கு
அறம்பயனுரைத்தனை புறம் பயமமர்ந்தோய்!

அப்பர் : திருவடித்தாண்டகம்

சுந்தரர் : திருப்புறம்புயம் அங்கமோதி பாடலும்
பாடிக்காணலாம்.

17. தூங்கல் வண்ணம் : தூங்கல் ஓசை பெற்று வருவது என்பர். தூங்கல் - அற்றுச்சேறல்

எடு : சம்பந்தர் - சீகாமரப்பண்கள்
அப்பர் - சீகாமரப்பண்கள்
சுந்தரர் - சீகாமரப்பண்கள்

18. ஏந்தல் வண்ணம் : சொல்லிய சொல்லாலே சொல்லப்படும் பொருள் சிறப்புச் செய்வது என்பர். ஏந்தல்-என்பது ஒருசொல்லே மிக்குவரல்:

எடு :

சுந்தரர் - நம்பி என்ற தக்கேசிப்பதிகம்
சம்பந்தர் - வீடலால வாயிலாய் - வானைக்காவில் என்ற
பாடல்கள்

அப்பர் - சிவனெனும் ஓசை - பதிகம்
-எடுத்துக்காட்டுகளாகும்.

19. உருட்டுவண்ணம் : உருட்டிச் சொல்லப்படுவது அராகமாகலின் அராகந்தொடுப்பது என்பது

எடு :

சம்பந்தரின் - 'நாலடி மேல்வைப்பு'
'ஈரடிமேல் வைப்பு'
முதலிய பதிகங்கள் எடுத்துக்காட்டாகும்.

20. முடுகு வண்ணம் : நாற்சீரடியின் மிக்கு ஓரடி அராகத்தோடு வரும் என்பர்.

எடு :

சம்பந்தர் - குன்றவார் சிலை பதிகம்
அப்பர் - காண்டலே கருத்தாய் பதிகம்
அல்லது
திடமலி மதிலணி சிறுகுடிமேவிய
படமலி அரவுடையீரே
படமலி அரவுடையீருமைப் பணிபவர்
அடைவதும் அமருலகமே - என்ற
சாதாரிப்பாடலும் காட்டாக வரலாம்.

முடிவுரை

திருப்புகழ் முற்றிலும் வண்ணப்பார்வையில் அமைந்தவை. காவடிச்சிந்து, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடல்கள் வண்ண வளர்ச்சி காட்டுவன. பெருவண்ணம், இடை வண்ணம், வனப்பு வண்ணம், ஆகியவையும் தனியே ஆயத்தக்கன. மூல இலக்கியம் வழங்கிய திருஞானசம்பந்தர் பாடல்கள் எல்லா இலக்கணப்பார்வைக்கும், ஒப்பாய்வுக்கும் இடம் தருவதை எண்ணி மேலும் ஆய்வோமாக.

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116